பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 27 சனிக்கிழமை 14.10.2023 கதிர் 337

# மாகாண அதிகாரங்களை தனிநபர் நலன்களுக்காக மழுங்கடிக்காதீர்

## வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் தவராசா வலியுறுத்து

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம், ஒக்.14

மாகாண சபையின் அதிகாரங்களை தனிநபர்களின்சொந்தநலன்களிற்காக மழுங்கடிக்க விடாது பாதுகாக்க வேண்டியதுகாலத்தின்கட்டாயதேவை.

வடக்கின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகளுடன் மூன்றுதடவை நடைபெற்றகலந்துரையாடலிலும்13ஆவதுதிருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது (பொலிஸ் அதிகாரம் தவிர) தொடர்பாக முன்மொழிந்திருந்தார்.

13வது திருத்தச் சட்டம் ஏற்புடையது அல்ல அது தமிழ் மக்களின் தீர்வாக அமையாது என்று கூக்குரல் இட்ட பல கட்சிகள் இன்று 13 முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது மட்டுமல்ல இந்திய பிரதமர் மோடிக்கு கூடஇதுதொடர்பாகஅரசிற்குஅழுத்தம் கொடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றன.

இவ்வாறு பலரும் எமது அரசியல் நோக்கைஅடைவதற்கானநடைமுறை சாத்தியமான முதற்படி மாகாண சபைதான் என விளங்கிக் கொண் ☞2

## இனி அது ரகசியம் அல்ல!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டு, அதுவும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதைப் பற்றி மட்டுமே பேசுவதற்காக நேரம் தருமாறு கேட்டுக் கடிதம் எழுதுவதுற்கு எடுக்கப்பட்ட முயற்சி இடைநடுவில் தள்ளாடுகின்றது. கடிதத்தை உடனடியாக அனுப்புவதா இல்லையா என்று நேற்று வெள்ளிக்கிழமை இறுதி முடிவு எடுக்கப்பட இருந்ததாகநீதியரசர்விக்னேஸ்வரன் புதன்கிழமை தெரிவித்திருந்தார். ஆனால், நேற்று மாலை நடந்த கட்சித் தலைவர்களின் சந்திப்பில் அந்த முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

மோடிக்கு எழுதுவதற்கான கடிதத்தை விக்னேஸ்வரன் ஏற்கனவே தயாரித்துவிட்டார். அது கட்சித் தலைவர்களின் பார்வைக்கும் தரப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் இந்த விடயத்தில் விக்னேஸ்வரனுடன் இணைந்து அதில் ☞2

## இந்தியாவிற்கான கப்பல் சேவை இன்று தொடக்கம்

(ந.லோகதயாளன்.)

இந்தியாவின் நாகைபட்டினத்தில் இருந்து காங்கேசன் துறைக்கான பயணிகள் கப்பல் சேவை இன்று தொடங்குகின்றது. நாகையிலிருந்து புறப்படும் கப்பலில் அங்குள்ள வர்த்தக சங்கத் தலைவர் உள்ளிட்ட நான்கு வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும் வருகை தருகின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக சங்கத்தினருடன் பேச்சுக்களை முன்னெடுக்கும் ☞2

## ராகுல் காந்தியிடம் விடைபெற்ற மிலிந்த

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரான மிலிந்த மொரகொட காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தியைச் சந்தித்துப் பிரியாவிடை பெற்றார். அமைச்சரவை மதிப்புள்ள தூதுவராக நியமிக்கப்பட்ட மொறகொட, தமதுசேவைக்காலத்தை முடித்துக்கொண்டு விரைவில் நாடு திரும்ப உள்ள நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மிலிந்த மொரகொட இந்தமாதம்நடுப்பகுதியில் தன்னுடைய பதவிக் காலத்தை முடித்துக் கொண்டு இலங்கை திரும்ப உள்ளார்.

சேவையிலிருந்து திரும்பும் அறிவிப்பை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மிலிந்த மொரகொட உத்தியோகப்பூர்வமாக ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளார்.

முன்னாள் இலங்கை ☞2

## வாகன விபத்தில் இளைஞன் சாவு

கிளிநொச்சிபொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யூனியன்குளம்பகுதியில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி பகுதியில்இருந்துஉழவுஇயந்திரம் ஒன்று அக்கராயனை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது யூனியன் குளம்பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரான கோணாவில் யூனியங்குளம் இலங்கேஸ்வரன் இசையமுதன் (வயது 17) படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அன்றையதினமேஇரவு 8.30 மணியளவில் உயிரிழந்தார்.

## இஸ்ரேல் – பலஸ்தீன போருக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

### கொழும்பில் நேற்று நடந்தது




இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கு இடையில் இடம்பெற்று வரும் மோதல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டன.

கொழும்பு-7 இல் அமைந்துள்ள தெவட்டகஹ வத்த பள்ளிவாசலுக்கு அருகில் ஒரு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் ☞2

## தமிழீழ விடுதலைப் புலிகள் பாசிச, புற்றுநோய் அமைப்பு

### சாடுகிறார் தமிழ் சட்டத்தரணி

தமிழ் மக்களின் தனித்துவமான விடுதலைப்போராட்டஅமைப்பு என உலகம்முழுவதும் அறியப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு கொடூரமான பாசிச அமைப்பாகும் எனக் குறிப்பிட்டுள்ளார், அரகலய போராட்டத்தின் மூலம் அரசியல் உலகிற்கு அறிமுகமாகிய இளம் அரசியல் செயற்பாட்டாளரான சட்டத்தரணி ஸ்வஸ்திகாஅருலிங்கம்.

ஈழப்போராட்டம் தொடர்பாக சிங்களத்தில் எழுதப்பட்ட இரண்டு புத்தகங்கள் பற்றி விவாதிக்க, ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலை ☞8

## பொலிஸ் மா அதிபருக்கு மீண்டும் பதவி நீடிப்பு

### 3 வாரங்களுக்கு வழங்கினார் ரணில் விக்கிரசிங்க

புதிய பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிப்பதில் தொடர்ந்து காணப்படும் இழுபறி நிலையை அடுத்து தற்போதையபொலிஸ்மா அதிபர்விக்ரமரத்னவிற்கு மேலும் மூன்று வார கால சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தப் பதவி நீடிப்பை நேற்று வழங்கினார்.

விக்ரமரத்னவிற்கு இரண்டாவது தடவையாக வழங்கப்பட்ட 3 மாத கால சேவை நீட்டிப்பு ஒக்டோபர் 9 முடிவடைந்தது. இதையடுத்தேநேற்றுமீண்டும் மூன்றாவதுதடவையாக அவருக்கு மூன்று வார காலசேவைநிடிப்பு ☞2

## முழு அடைப்புப் போராட்ட ஏற்பாடு குறித்து சந்திப்பு

### தமிழக் கட்சித் தலைவர்கள் நேற்று நடத்தினர்



முல்லைத்தீவுநீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 7 தமிழ்க் கட்சிகள் நடத்தப் போவதாகஅறிவித்துள்ள முழு அடைப்புப் போராட்டம் தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் நேற்று மாலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் வீட்டில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் ☞2

## கச்சதீவை மீளப் பெறுவோம் என்போர் அங்குள்ள டுபாக்கூர் அரசியலாளர்கள்

### அமைச்சர் டக்ளஸ் எடுத்தெறிந்து பேச்சு

(ந.லோகதயாளன்.)

எமதுபகுதியில்உள்ள சிலர் போன்றே இந்தியாவிலும் உள்ள டுபாக்கூர் அரசியல்வாதிகளே கச்சதீவை மீளப் பெறுவோம் என்று சொல்கின்றனர். அது ஒருபோதும் நடக்காத காரியம் என மீன்பிடித் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மன்னார் மாவட்டம் அந்தோணியார்புரம் மீனவ சங்கத்தில் மீனவர்கள், விளையாட்டு சங்கங்களின்பிரதிநிதிகள் மத்தியில் பேசும்போதே அவர் இப்படித் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர் மேலும்தெரிவித்ததாவது:

விரைவில் வடக்கு மீனவர்களை கடலால் இந்தியாவுக்கு அனுப்ப யோசிக்கிறன். கடற்படை திருப்பி அனுப்பும். ☞2

## அத்துரலியே ரத்ன தேரரின் எம்.பி. பதவி தப்பியது

நாடாளுமன்ற உறுப்பினர்அத்துரலியே இரத்தினதேரரை'எங்கள் மக்கள் சக்தி' கட்சியில் இருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. இதனால் அவர் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராக நீடிப்பார்.

அதுரலியே இரத்தின தேரர் இந்தக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்திற்கு தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அந்தக் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து அவரைக்கட்சியிலிருந்து நீக்குவதாக அறிவிக்கப்பட்டது.

அத்துரலியே இரத்தின தேரர் கட்சியின் முடிவைஎதிர்த்துத் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கையெழுத்திடத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த 7 கட்சிகளில் சில இன்னும் அதில் கையெழுத்திடவில்லை. அதிலும் முக்கியமாக இந்த விடயத்தில் அதீத அக்கறையை வெளிக்காட்டிய கட்சிகளில் ஒன்றான ரெலோ இன்னும் கையெழுத்திட முன்வருவதாக இல்லை.

கடந்த புதன்கிழமை கையெழுத்திட வருவதாகத் தெரிவித்திருந்த ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அன்றையதினம் வரவில்லை. நேற்று வெள்ளிக்கிழமை வந்து கையெழுத்திடுவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் நேற்றும் அவர் வரவில்லை. இதையடுத்து நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு அவர் வந்து கையெழுத்திடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும் அவர் கையெழுத்திடுவாரா இல்லையா என்கிற கேள்விக்குறிநீடிக்கிறது. அதற்கொரு காரணம், ஐயப்பாடு ரெலோவில் காணப்படுகின்றது போன்று தெரிகிறது. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான வினோ நோகராதலிங்கம் தனது முகப் புத்தகத்தில் பகிர்ந்துள்ள செய்தி இது தொடர்பில் மிக முக்கியமானதாகப் படுகின்றது.

மோடியை ஒன்றாகச் சந்திக்க முயற்சிப்போம் வாருங்கள் என்று விக்னேஸ்வரன் விடுத்த அழைப்புத் தொடர்பில் பத்திரிகைகளில் வெளியாகிய செய்திகளைத் திரட்டி பதிவேற்றியுள்ள அவர், ''தனது தலைமையில்தான் என குண்டைப் போட்டுக் குழப்பிவிடுவார் கடைசியில்'' என்று கருத்தும் தெரிவித்திருக்கிறார்.

அதாவது, தமிழ்க் கட்சிகளின் தலைவர்களைச் சந்திப்பதற்கு மோடி ஒருவேளை இணங்கிவிட்டாரானால் அந்தச் சந்திப்புத் தனது தலைமையில்தான் நடக்க வேண்டும், இங்கிருந்து செல்லும் தலைவர்கள் எல்லோரும் தனது தலைமையில்தான் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தி இந்த முயற்சியையே விக்னேஸ்வரன் குழப்பிவிடுவார் என்று அர்த்தப்படுத்தியிருக்கிறார் வினோ.

இந்த ஐயப்பாடே ரெலோ இன்னும் கடிதத்தில் கையெழுத்திடாமல் இருப்பதற்கான காரணமாகக்கூட இருக்கலாம். அது தவிர கடிதத்தின் விடயதானத்தில் அந்தக் கட்சிக்கு முரண்பாடுகள் எவையும் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தபோதே, 13ஐ முழுமையாக நிறைவேற்ற இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்து கடிதம் எழுதுவதில் மும்முரமாக இருந்தது ரெலோ. அந்தக் கடிதத்தில் பின்னர் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் சம்பந்தனும் சுமந்திரனும் சமஷ்டி உள்ளிட்ட வேறு கோரிக்கைகளையும் திணித்துவிட்டார்கள் என்கிற முரண்பாடும் அப்போது எழுந்தது. அப்படியிருக்கும்போது விக்னேஸ்வரனின் கடித உள்ளடக்கத்தில் ரெலோவுக்கு முரண்பாடு ஏற்பட வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை. வேறு ஏதோ விடயம்தான் தாமதத்திற்கும் ஐயப்பாட்டுக்கும் காரணமாக இருக்கமுடியும்.

அது ஒருவேளை விக்னேஸ்வரனின் தலைமை பற்றியதாக இருக்கலாம். கூட்டமைப்பிற்குள் தமிழ்அரசுக்கட்சியின் ஆதிக்கத்தை எதிர்த்து வெளியே வந்துவிட்டுப் பின்னர், விக்னேஸ்வரனுக்குத் தலைமைப் பதவியைத் தூக்கிக் கொடுப்பதா என்கிற வினா ரெலோவுக்குள் இருப்பதற்கான நியாயங்கள் இருக்கின்றன. சட்டிக்குள் இருந்து நெருப்புக்குள் விழுந்துவிடாமலிருக்கவேண்டும் என்கிற எச்சரிக்கை உணர்வாகவும் இருக்கலாம்.

இருந்தாலும் யார் வந்தாலும் வராவிட்டாலும் மோடிக்கான கடிதத்தை அனுப்பியே ஆக வேண்டும் என்று சில கட்சித் தலைவர்கள் பிடிவாதமாகவும் இருக்கின்றார்கள். அதனால் ரெலோ மற்றும் தமிழ்அரசுக்கட்சி கையெழுத்திட்டாலும் இல்லாவிட்டாலும் கடிதம் அனுப்பப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன. எத்தனை கட்சிகள் சேர்ந்து கையெழுத்திட்டாலும் அழைப்பு என்னவோ கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவு என்பதே விவரமறிந்த வட்டாரங்களின் தகவல்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கும் வேளையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் செயற்பாடுகள் சில அமைந்திருக்கின்றன.

நேரடியாக விடயத்திற்கு வருவதானால், அண்மையில் மத்திய சுகாதார அமைச்சினால் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளராக கடமை புரியும் மருத்துவருக்கு அவரது பதவிக்கு மேலதிகமாக மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொள்ளாமல் விடுவதற்கு ஆளுநருக்கு முழுமையான அதிகாரம் உண்டு. இருப்பினும் அப்படி நடக்கவில்லை.

இது ஓர் முற்றிலும் பிழையான முன்னுதாரணம் மட்டுமல்ல இதற்கு இடம் விட்டுக் கொடுக்கப்படுமேயானால் மத்தியின் கீழ் செயற்படுகின்ற ஏனைய சேவைகளினைச் சேர்ந்தவர்களும் இதேபோல் மத்தியின் அதிகாரிகளாக இருக்கும் அதேவேளையில் மாகாண சபையின் நிர்வாக அதிகாரிகளாகவும் நியமிக்கப்படலாம். இது மாகாண சபை முறைமையை முற்றாகவே மத்தியமயமாக்கும் ஒரு செயற்பாடாகும்.

மாகாண சபை முறைமை என்பது எத்தனையோ இயக்கங்களைச் சேர்ந்த போராளிகளின் அர்ப்பணிப்பின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற ஒன்றாகும். மாகாணசபைமுறைமை அமுலுக்கு வந்ததிலிருந்து படிப்படியாக மாகாண சபையின் அதிகாரங்கள் மத்தியமாக்கப்பட்ட சூழலில் இன்று 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்குவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறான நியமனங்களும் அதனைக் கண்டு கொள்ளாமல் இருக்கும் ஆளுகைகளும் போராளிகளின் தியாகங்களினால் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையை தங்களது சொந்த நலன்களிற்காக மழுங்கடிக்க விடாது நிலைநாட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

வடக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட சுகாதார நியதிச் சட்டத்தின் பிரிவு 5(1)இன் பிரகாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி என்பது மாகாண சபைக்குரிய விடயமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இந் நியதிச் சட்டம் 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாணங்களிற்கு கொடுக்கப்பட்ட அதிகார வரம்பிற்கு அமைவாக வடக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டது. மேலும், இந் நியதிச்சட்டம் அமுலுக்கு வந்த 23.02.201ஆம் திகதியிலிருந்து (ஆளுநர் நியதிச் சட்டத்தில் ஒப்பமிட்ட திகதி) மத்தியில் சுகாதார சேவைகள் சட்டம் வடமாகாணத்தில் செல்லுபடியாகாது. அது மட்டுமல்ல அத்திகதியிலிருந்து மத்தியில் சுகாதார சேவைகள் சட்டமோ அல்லது அதன் தத்துவத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள், உபவிதிகள் எதுவுமோ இச் சேவையினைக் கட்டுப்படுத்தாது. இது தொடர்பாக அன்றைய சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் அவர்களினால் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அபிப்பிராயம் கோரியதற்கு, எமது நியதிச் சட்டத்திற்கு முரணான மத்திய சுகாதார சேவையின் தத்துவத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட எவ்வித சுற்றறிக்கைகளும் ஏனையவைகளும் செல்லுபடியற்றதாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டது.

மாகாணசபைகள் ஏற்படுத்தப்பட்ட பின் மாகாண சபைகளுக்கான விடயப்பரப்புகளிற்குரிய மாகாண சேவைகளை ஆரம்பிப்பதற்கு தத்துவம் உண்டு. இருந்தும் உயர் பதவியினை வகிப்பவர்கள் முழு நாட்டிலும் சேவை செய்யக் கூடிய அனுபவங்களைபெற்றவராகஇருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அனைத்து இலங்கை சேவையினைச் சேர்ந்த நிர்வாகச்சேவை, கணக்காளர் சேவை, இயந்திரவியலாளர் சேவை, விஞ்ஞான சேவை, கல்வி நிர்வாக சேவை, திட்டமிடல் சேவை, விவசாய சேவை, கால்நடை வளர்ப்பு சேவை, மருத்துவசேவை போன்ற சேவையினைச் சேர்ந்தவர்கள் மத்தியினால் மாகாணங்களிற்கு விடுவிப்பதற்கான இணங்கப்பாடு காணப்பட்டது. அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களை மாகாணங்களில் பதவியில் நியமிப்பது என்பது ஆளுநரையும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவையும் சார்ந்தது.

இன்று மருத்துவ சேவையினைத் தவிர்ந்த மேலே குறிப்பிடப்பட்ட சகல உத்தியோகத்தர்களினதும் இட நியமனம் (ஊடயஉநஅநவெ) மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவினாலே கையாளப்படுகிறது. ஆனால் மருத்துவ சேவையினைச் சேர்ந்தவர்களை மட்டும் இதுவரை மத்திய அமைச்சு மாகாணத்திற்கு விடுவிப்பதோடு நின்றுவிடாமல் அவர்களினது இட நியமனத்தினையும் (ஊடயஉநஅநவெ) செய்து வந்துள்ளது. இது முழுக்க முழுக்க அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கும் மாகாண சபை சட்ட மூலத்திற்கும் முரண்பாடான செயலாகும். இவ்வாறான நியமனங்கள் அரசியல் அமைப்பிற்கும் மாகாண சபைகள் சட்டத்திற்கும் முரண்பாடாக இருக்கலாகாது என்பதற்காக அவ்வாறு இட நியமனம் பெற்றவர்களிற்கு ஆளுநர்கள் மீளவும் நியமனங்கள் வழங்குவது நடைமுறையாக வந்துள்ளது. ஆனால் ஆளுநர் அவ்வாறு நியமனம் வழங்க மறுப்பாராயின் மத்தியினால் வழங்கப்பட்ட நியமனம் செல்லுபடியற்றது என்பது கவனத்தில் கொள்ள வேண்டும்.

அன்றைய இணைந்த வடக்கு கிழக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி இருந்த காலத்தில் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமிக்கப்பட்டார். அதேவேளை மத்தியும் ஒருவரை நியமிக்க முற்பட்டது. மத்தியின் நியமனத்தை புறக்கணித்து மாகாண சபை தங்களது நியமனத்தை செய்திருந்தது. அதேபோல் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் திலிபன் அவர்களை மத்திய அமைச்சு நியமித்த போதும் அதனை எதிர்த்து வடமாகாண சபை தீர்மானித்ததன் அடிப்படையில் மத்திய அமைச்சு அவரது நியமனத்தை மீளப்பெற்றுக் கொண்டது. ஆதலினால் இவ்விடயத்தில் மத்திய அமைச்சு நியமனங்களை செய்தாலும் அதனை மறுதலிப்பதற்கு அல்லது மீளப் பெறும் வண்ணம் கோரிக்கை விடுவதற்கு மாகாண சபைக்கு அல்லது அதன் பிரதான நிறைவேற்று செயற்பாட்டாளரான ஆளுநருக்கு முழு உரிமையும் உண்டு என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் கால் நூற்றாண்டுக்கு மேலான அர்ப்பணிப்பிலான போராட்டத்தின் விளைவாக பெற்ற 13வது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களை பேணிப் பாதுகாப்பதற்கு முன்வருவார்கள் என எதிர்பார்க்கின்றேன். என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான ஈ.பி.டி.பியைச் சேரந்த சி.தவராசா அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம்கள் பெரும்பான்மையாகக் கலந்துகொண்டனர்.

''இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்திற்கு இடையில் இடம்பெற்றுவரும் போருக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும், பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும், இஸ்ரேல் அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும்'' ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகையைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டிருந்தனர். இதேவேளை, இஸ்ரேல் - பாலஸ்தீன் மோதலில் ஐக்கிய நாடுகள் இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டாம் என்று வலியுறுத்தியும் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு கோசங்கள் எழுதப்பட்ட அட்டைகளைத் தாங்கியிருந்தனர். அவற்றில், ''இரட்டை வேடம் வேண்டாம் ஐ.நா'', ''இஸ்ரேல் - பாலஸ்தீன போரில் மனித உரிமைகள் எங்கே?'' ''சர்வதேச நீதிமன்றம் உடன் தலையிடு'' போன்ற வாசகங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தன.

## இந்தியாவிற்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்ப்புடனேயே அவர்கள் வருகை தருகின்றனர்.

காங்கேசன் - நாகை பயணிகள் கப்பல் சேவை தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட திகதிகளில் அது இடம்பெறாது தாமதமாகி வந்த நிலையில், இன்று அது தொடங்க இருக்கின்றது.

இந்தக் கப்பலில் வருகை தரும் நால்வர் அடங்கிய குழுவில் வர்த்தக சங்கத்தின் இரு பிரதிநிதிகளுடன் பொருட்களை ஏற்றி இறக்கும் வாட்ச்களின் உரிமையாளர்கள் இருவரும் உள்ளடங்குகின்றனர்.

இவ்வாறு நாகையில் இருந்து வரும் இக் குழுவினர் நான்கு தினங்கள் யாழில் தங்கியிருந்து பல்வேறுபட்ட தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

## முழு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா மற்றும் அக் கட்சியின் செயலாளர் சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் ரெலோ சார்பில் வலி. கிழக்கு பிரதேச சபை முன்னாள் தலைவர் நிரோஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் அடைப்புப் போராட்டத்துக்கான செயற்பாடுகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தக் கட்சி முன்னின்று மேற்கொள்வது என்பது பற்றி ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றைய சந்திப்பின்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்க நேரம் ஒதுக்கக்கேட்டு தமிழ்த்தலைவர்கள் எழுதியுள்ள கடிதத்தை உடனடியாக அனுப்புவதா இல்லையா என்று முடிவுசெய்யப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அது பற்றி எந்த முடிவும் நேற்று எடுக்கப்படவில்லை. நாளை ஞாயிற்றுக்கிழமை அது பற்றி மீண்டும் கூடி முடிவு செய்யலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

## அத்துரலியே ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல்செய்த மனுமீது விசாரணை நடத் தப்பட்ட நிலையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீதியரசர்களான புவனேக அலுவிஹார, முர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வில் குறித்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், அத்துரலியே இரத்தின தேரர் தலைமையிலான ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும் எங்கள் மக்கள் சக்திக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறி ஒழுக்காற்று குழுவினால் அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு இல்லை என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அண்மையில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அகமட் வெளியேற்றப்பட்டமை சரியானதே என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. அதனால் அவரது நாடாளுமன்றப் பதவி வெறிதாகி புதிய உறுப்பினராக அலி சாகிர் மௌலான அந்த இடத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார். அதனை அடுத்து அத்துரலியே ரத்ன தேரரின் வழக்கும் பெரும் எதிர்பார்ப்புகளுக்குள்ளாகி இருந்தது.

இருப்பினும் இரு கட்சிகளுக்கும் இடையிலான ஒப்பந்தங்களில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பு இல்லாத காரணத்தால் இரத்தின தேரருக்குச் சார்பாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## ராகுல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் மிலிந்த மொரகொட இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இருநாடுகளுக்கு இடையிலான உறவுகளை பலப்படுத்துவது மற்றும் வளர்ப்பது ஆகியவற்றில் அவர் முக்கிய பங்கை ஆற்றியுள்ளார்.

குறிப்பாக இலங்கை மற்றும் இந்தியாவின் மின்சாரக் கட்டமைப்புக்களை ஒன்றுடன் ஒன்று இணைப்பது போன்ற முயற்சிகளில் ஈடுபட்டு இந்தியாவுடனான உறவை மேம்படுத்துவதில் விரிவான மூலோபாயத்தை தன்னுடைய காலத்தில் உருவாக்கியுள்ளார்.

இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு முன் இந்திய தேசிய காங்கிரஸின் அலுவலகத்தில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ராகுல் காந்தியிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்ட அவர், ஏற்கனவே, இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்களையும் சந்தித்து பிரியாவிடை பெற்றிருந்தார்.

## கச்சதீவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் விமானத்தில் செல்ல உண்டியல் குலுக்கி பணம் சேகரிக்குமாறு கூறியுள்ளேன். அவ்வாறு சென்னை செல்வோர் சட்ட சபை முன்பாக ஊடகங்கள், அரசியல்வாதிகளிற்கு இந்தப் பிரச்சினையைக் கூறவேண்டும். இவ்வாறு இரு வாரங்களிற்குள் செய்யவேண்டும்.

இந்தியாவில் ஆறு மாதங்களிற்குள் வரும் தேர்தலிற்காகவே கச்சைதீவை மீடகப்போவதாக கூறுகின்றனர். அப்படி ஒன்றும் நடக்கப்போவது கிடையாது. எமது நாட்டில் அண்மையில் தேர்தல் வராது.

1978 மற்றும் 1984 இல் பாலஸ்தீனத்திற்கு இரு தடவைகள் பயிற்சிக்காக சென்றபோதே அவர்களால் வெல்ல முடியாது என அன்றே ஊகித்துக்கொண்டேன்.

இந்திய இழுவைப் படகுகளிற்கு அனுமதி வழங்குவதாக எமது நாட்டின் பிரதமர் கூறியதாக ஓர் கருத்து உலாவுசிறது. அது தொடர்பில் ஓர் ஊடகம் என்னிடம் கருத்துக் கோரியது. இலங்கையின் கடற்றொழில் அமைச்சரின் முடிவுதான் இறுதி முடிவு அந்த முடிவு இலங்கை கடலில் ஒரு விநாடிகூட அனுமதி வழங்க முடயாது என்பதே. கடற்றொழில் அதைச்சர் நான்தான். அண்மைய நாள்களாக இந்திய மீனவர் வருகை குறைந்துள்ளது - என்றார்.

## பொலிஸ் மா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலைகள் அதிகரித்துள்ள நிலையில் நிரந்தரமான பொலிஸ் மா அதிபர் ஒருவர் இல்லாமல் இருப்பது பொலிஸ் திணைக்களத்திற்குள்ளேயே கவலையை ஏற்படுத்தியுள்ளன. தற்போது வழங்கப்பட்டிருக்கும் குறுகிய கால பதவி நீடிப்பானது பொலிஸ் துறையின் ஒட்டுமொத்த செயல்பாட்டின் மீது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# சிறைச்சாலைகளுக்கான செலவு குறித்து இராஜாங்க அமைச்சர் ஜயரத்ன கருத்து!

திறைசேரி மீது சிறைச்சாலைகளுக்கான செலவுகள் ஏற்படுத்தும் சுமை குறித்த கலந்துரையாடலில் சிறை அமைப்பு முறையை மீளமைப்பதற்கு இராஜாங்க அமைச்சர் ஆதரவு தெரிவிக்கிறார். கருத்துக்கு வலுச்சேர்ப்பதற்கு அவர் இரண்டு கூற்றுகளை முன்வைக்கிறார்:

1. (அ) தற்போதுள்ள சிறைக் கைதிகளின் எண்ணிக்கை 28,468. (ஆ) இவர்களில் அநேகமானவர்கள் (50.3வீதம்) போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறையில் உள்ளனர். இந்த எண்ணிக்கை காலப்போக்கில் அதிகரித்து வருகிறது.

2. சிறை அமைப்பை நிர்வகிப்பதற்கு வருடாந்தம் ரூ.10 பில்லியன் செலவாகிறது. அந்தத் தொகையில் ரூ.3.9 பில்லியன் 28,000 சிறைக் கைதிகளின் உணவுச் செலவுகளுக்காக மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூற்றுகளைச் சரிபார்க்க, இலங்கை சிறைச்சாலைகளின் புள்ளிவிவரங்கள் 2023 அறிக்கையையும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைதளத்தையும் ஆராய்ந்தது.




கூற்று 1 (அ): ஒகஸ்ட் 24, 2023 அன்று முதன்முறை தரவு சரிபார்க்கப்பட்டபோது, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைதளத்தில் கைதிகளின் எண்ணிக்கை 28,655 ஆகக் காணப்பட்டது. இந்த வலைதளம் நாளாந்த புதுப்பிப்புகளை வழங்குகிறது. ஆனால் கடந்த திகதிகளுக்கான எண்ணிக்கைகள் வழங்கப்படவில்லை. இந்த எண்ணிக்கை இராஜாங்க அமைச்சர் குறிப்பிடும் 28,468 எனும் எண்ணிக்கையை (0.6 சதவீதத்தால்) விட சற்று அதிகமாகும். எனினும் இந்தக் கூற்று வெளியிடப்பட்ட திகதி (10 ஒகஸ்ட் 2023) அளவில் சரியாக இருந்திருக்கும். கூற்று 1 (ஆ): குற்றத்தின் அடிப்படையில் சிறையில் அடைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில், சிறையில் உள்ளவர்களின் எண்ணிக்கையை (ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சிறையில் உள்ளவர்களின் எண்ணிக்கை) பி.எஸ்.ஆர். வழங்கவில்லை. மாறாக சிறைக்கு வருபவர்களின் எண்ணிக்கையை (அனுமதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை) மட்டுமே குறிப்பிடுகிறது. 2022 ஆம் ஆண்டில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையானது மொத்தக் கைதிகளின் சேர்க்கையில் 63 வீதம் என கிடைக்கும் சமீபத்திய தரவு குறிப்பிடுகிறது. எனவே அவருடைய கூற்று சரியானது எனத் தெரிகிறது. அதாவது போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டவர்கள் சிறைக் கைதிகளில் பெரும்பான்மையானவர்களாக இருக்கிறார்கள்.

கூற்று 2: பி.எஸ்ஆர். அறிக்கையின் பிரகாரம், 2022 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகளின் மொத்த பராமரிப்புச் செலவினம் (மீண்டுவரும் செலவினம்) ரூ.9.8 பில்லியனான உள்ளது. பி.எஸ்.ஆர். ஒரு கைதிக்கான உணவுச் செலவினத்தையும் வழங்குகிறது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் மொத்த உணவுச் செலவினம் ரூ.176,115 ஆகும். இது ஒரு கைதிக்கான சராசரி மீண்டுவரும் செலவினத்தின் 40 வீதம் ஆகும். மொத்தச் செலவினமான ரூ.9.8 பில்லியனில் 40 வீதம் ரூ.3.9 பில்லியன், இது இராஜாங்க அமைச்சர் குறிப்பிடும் பெறுமதி ஆகும்.

எனினும், இராஜாங்க அமைச்சர் குறிப்பிடும் இரண்டு பெறுமதிகளும் (10 பில்லியன் மற்றும் 3.9 பில்லியன்) 2022 ஆம் ஆண்டுக்குரியவை. இதன் போது சராசரி நாளாந்த கைதிகளின் எண்ணிக்கை 22,000 ஆகக் காணப்பட்டது. அதேவேளை 2023 ஆம் ஆண்டில் இது 28,000 ஆகக் காணப்படுகிறது. 2023 ஆம் ஆண்டிற்கு இராஜாங்க அமைச்சர் குறிப்பிடும் சராசரி பெறுமதிக்கு 2022 ஆம் ஆண்டைப் போன்றே நபர் ஒருவருக்கான சராசரி உணவுச் செலவினம் இருந்தாலும் கூட (உணவு பணவீக்கம் 62 சதவீதத்தை விட அதிகமாகியுள்ளது), வருடாந்த மொத்த உணவுச் செலவினம் ரூ.4.9 பில்லியனாக இருக்கும். எனவே இராஜாங்க அமைச்சர் 2023 ஆம் ஆண்டுக்குரிய கைதிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடும்போதும், 2022 ஆம் ஆண்டுக்கான செலவினங்களைக் குறிப்பிடுகிறார். உண்மையான பெறுமதிகள் அவர் குறிப்பிடுவதை விட 30ூ அதிகமாக இருக்கலாம். அவர் குறிப்பிடும் 2022 பெறுமதியை விட 2023ம் ஆண்டுக்கான பெறுமதிகள் அவரது ஒட்டுமொத்த வாதத்திற்கும் சாதகமாக இருக்கிறது.

கைதிகளின் எண்ணிக்கை மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறையில் உள்ளவர்களின் சதவீதம் தொடர்பான இராஜாங்க அமைச்சரின் முதலாவது கூற்று கிடைக்கக்கூடிய தரவுகளுடன் பொருந்துகின்றன. இரண்டாவது கூற்றில், அவர் 2022 ஆம் ஆண்டுக்கான கைதிகளின் தரவைக் குறிப்பிடுகிறார். 2023 ஆம் ஆண்டுக்கான கைதிகளின் எண்ணிக்கையயாக அவர் அதைத் தவறாகக் குறிப்பிடுகிறார். எனினும் 2023 இற்கான தரவு அவரது ஒட்டுமொத்த வாதத்திற்கு மேலும் வலுச்சேர்க்கிறது.

ஆகவே அவரது அறிக்கையை நாங்கள் சரியானது என வகைப்படுத்துகிறோம்.

பகிரங்கமாகப் பொதுவெளியில் கிடைக்கக்கூடிய அண்மைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இணையத்தளம் தனது முடிவுகளை எட்டுகின்றது. புதிய தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில் இந்த மதிப்பீடுகளை அது மறுபரிசீலனை செய்யும்.

இன்றைய நிலைவரப்படி, சிறைச்சாலைகளில் உள்ள மொத்தக் கைதிகளின் எண்ணிக்கை 28,468. ஜ...ஸ போதைப் பொருள் தொடர்பான குற்றவாளிகளின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்து வருகிறது. இன்றைய நிலைவரப்படி, மொத்தக் கைதிகளில் 50.3 சதவீதமானவர்கள் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டவர்கள். சில சிறைகளில் சுமார் 65 சதவீதமானவர்கள் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் .

இந்தக் காலப்பகுதியில், அதாவது 2021 ஆம் ஆண்டின் இறுதி ஆறு மாதங்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் 28 ஆயிரம் கைதிகளுக்காக அரசாங்கம் அவர்களின் உணவுக்காக மட்டும் ரூ.3.9 பில்லியனைச் செலவுசெய்துள்ளது. ஜ....ஸ சிறை நிர்வாகத்தின் ஒட்டுமொத்த பராமரிப்புச் செலவு சுமார் 10 பில்லியன் ஆகும்.

(05)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கியதும் நாடாளுமன்றை கலைக்கவேண்டும்

## சுனில்ஹந்துநெத்தி ஆணித்தரம்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை நீக்கிய உடன் நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான தீர்மானம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் அன்றைய தினமே நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான தீர்மானத்தையும் சமர்ப்பிக்கவேண்டும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அரசியல் தேவைகளுக்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்படவுள்ளது என்ற ஊகங்களுக்கு மத்தியில் ஜேவிபி இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளது.



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கிய பின்னர் ரணில்விக்கிரமசிங்க அரசாங்கம் அதிகாரத்தில் இருப்பதற்கு அனுகுமதிக்க முடியாது என ஜேவிபியின் சுனில்ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை நீக்கிவிட்டு அவர்கள் நாடாளுமன்ற அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு அனுமதிக்க முடியாது என குறிப்பிட்டு;ள்;ள அவர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை நீக்கு-வதற்கான தீர்மானத்தை கொண்டுவரும் அன்றே நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான தீர்மானத்தையும் அவர்கள் கொண்டுவரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கவேண்டும் என ஜேவிபி நீண்டகாலமாகக் குரல்கொடுத்துவருகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை நீக்கவேண்டும். ஆனால் அதன் போர்வையின் கீழ் நீங்கள் நாடாளுமன்ற அதிகாரத்தை தக்கவைக்க அனுமதிக்க முடியாது. ரணில்விக்கிரமசிங்கவிற்கு அதற்கான மக்கள் ஆணையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# அம்பலாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் பணத்தை கொள்ளையடித்த தம்பதி கைது!

அம்பலாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் இரும்புப் பணப்பெட்டியை உடைத்து பணத்தை கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் திருமணமான தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



அம்பலாந்தோட்டை பிரதேச மல்பெட்டாவை பகுதியை சேர்ந்த கணவன் மனைவியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி அம்பலாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் இரும்புப்பணப்பெட்டியை உடைத்து 19 லட்சத்து 12 ஆயிரத்து 148 ரூபா திருடப்பட்டதாக செயலகத்தின் சார்பாக அம்பலாந்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து, பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகத்தின் பேரில் தம்பதியினர் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், விசாரணையின் போது கைதுசெய்யப்பட்ட தம்பதியினருடன் நெருங்கிய தொடர்புடைய வலஸ் முல்ல பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் குறித்த கொள்ளையைச் செய்தார் எனவும் கொள்ளையடித்த பணத்தில் சிலவற்றை மூவரும் பகிர்ந்து கொண்டனர் எனவும் குறித்த நபருக்கு வங்கி கணக்குகளிலும் பண வைப்புச் செய்-துள்ளதாகவும் சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# வடக்கின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சி தருகிறது!

## பிரித்தானிய அமைச்சர் ஆன் மேரி கருத்து

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாக பிரித்தானிய அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரித்தானிய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் வடமாகாண மக்களின் வாழ்க்கை முறையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் சிறந்த எதிர்காலம் தெரிவதாகவும் பிரித்தானிய அமைச்சர் கூறியிருந்தார்.

இந்தச் சந்திப்பு வியாழக்கிழமை யாழ்.நகரில் இடம்பெற்றது. வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியனுக்கு ஆளுநர் விளக்கமளித்தார். வடமாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கும் பூரண ஆதரவை வழங்குவதாக பிரித்தானிய அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக் அவர்களும் கலந்துகொண்டார்.

(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உடனடி நியமனம் அவசியம்

இலங்கையின் காவல் மா அதிபருக்கு மீண்டும் மூன்று வார கால சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. இதுஅவருக்குவழங்கப்பட்டுள்ளமூன்றாவது சேவை நீடிப்பு. ஏற்கனவே அவருக்கு இரண்டு தடவைகள்மூன்றுமூன்றுமாதங்களாகச்சேவைநீடிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. இப்போதுமிகக்குறுகியதாக மூன்ற வார சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

புதிய காவல் மா அதிபரை நியமிக்க முடியாத அளவிற்கோ அல்லது பதவியில் இருப்பவரை குறைந்தது ஒரு வருட காலத்திற்கு சேவை நீடிப்பில் வைத்திருப்பதற்கோ முடியாத குழப்ப நிலைக்குள் தற்போதைய ஆட்சி சிக்கிக் கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது. வெளி அழுத்தங்களுக்கு ஆட்பட்டு இன்றைய ஆட்சியாளர்கள் முடிவெடுப்பதற்கு அஞ்சுகின்றார்கள் என்பதற்கு இதுவொரு சிறந்த முன்னுதாரணம்.

காவல் மா அதிபராக புதிதாகப் பதவியேற்பதற்குத் தயாராக உள்ளவர்கள் மீது உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன என்கிற அழுத்தம் ஒரு பக்கமும் அவர்களில் ஒருவரையே பதவிக்குக் கொண்டு வரவேண்டும் என்கிற பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் விருப்பம் மற்றொரு பக்கமுமாக அழுத்தும்போது முடிவெடுக்க முடியாமல் அரசுத் தலைவர் திணறுகின்றார் என்று தெரிகின்றது. ஆனால், இந்தக் குழப்பங்கள் பொதுமக்களின் பாதுகாப்பு விடயத்தில் மிகக் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும்என்பதைக்கவனத்தில்எடுக்கவேண்டும்.

காவல் மா அதிபருக்கு மூன்று வார கால நீடிப்பு வழங்குவது என்கிற அரசுத் தலைவரின் தற்போதைய தீர்மானம் காவல் திணைக்களத்தின் உள்ளக வட்டாரங்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நீட்டிப்பின் குறுகிய காலம், துறையின் ஒட்டுமொத்த செயல்பாட்டின் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்ற கவலையைத் தூண்டியுள்ளது.

முக்கிய கவலைகளில்ஒன்று, அத்தகைய குறுகிய நீட்டிப்பிலிருந்து எழக்கூடிய நிச்சயமற்ற தன்மை மற்றும் தலைமையின் தொடர்ச்சியின்மை. இது திணைக்களத்திற்குள் செயல்படும் திறன் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகளை பாதிக்கலாம், இது சட்ட அமலாக்க முயற்சிகளில் சாத்தியமான இடையூறுகளுக்கு வழிவகுக்கும்.

முறையாக நியமனம் செய்யப்பட்ட காவல் மா அதிபர் இல்லாதது காவல் துறைக்குள் இடையூறுகளை உருவாக்கும் வாய்ப்புள்ளது. சட்ட அமலாக்கத்திற்கான திசை, கொள்கைகள் மற்றும் உத்திகளை வரையறுப்பதில் காவல் மா அதிபர் பதவி முக்கிய பங்கு வகிக்கிறது, அதேநேரத்தில் ஒட்டுமொத்த உறுதிப்பாடு மற்றும் பாதுகாப்பையும் பராமரிக்கிறது. அந்தப் பதவி வெற்றிடமாகவே இருப்பது, காவல் துறையின் செயல்பாடுகளுக்கு இடையூறாக அமையும் அபாயம் உள்ளது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் துப்பாக்கிச் சூடுகள், கொலைகள், கொள்ளைகள் எனக் குற்றச்செயல்கள்அதிகரித்துவரும்நிலையில் நிரந்தரமான காவல் மா அதிபராகப் புதியவர் ஒருவரை உடனடியாக நியமனம் செய்வது அவசியம். அரசுத் தலைவர் இந்த விடயத்தில் தேவையற்றுக் கால தாமதத்தை ஏற்படுத்தாது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.


# இலங்கையின் ஜென்டில்மேனுக்கு மேற்குலகின் மீது என்ன கோபம்?

உபுல் ஜோசப் பெர்னாண்டோ



2013 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறீகோத்தாவில் ஓர் அற்புதமான சம்பவம் நடந்தது. அதுதான், இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களை அம்பலப்படுத்திய பிரித்தானியவின் சனல்- 4 தொலைக்காட்சியின் இயக்குநர் கெலும் மக்ரே சிறிகொத்தவிற்கு வந்து இங்குள்ள செய்தியாளர்களைச் சந்தித்தார். செய்தியாளர் சந்திப்பை அப்போதைய யூ.என்.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள, கட்சித் தலைவர் ரணிலின் ஒப்புதலுடன் ஒழுங்கு செய்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தச் செயலால் கோபமடைந்த, பொது பல சேனா அமைப்பினர்



சிறீகோத்தாவை முற்றுகையிட்டு எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்தப் போராட்டத்தில் பொது பல சேனாவின் தலைவர்களும் கலந்து கொண்டனர். அதன் தலைவர் கலகொடஅத்தே ஞானசார தேரரும் அவர்களில் ஒருவர். பிக்குகள் உள்ளிட்ட பொது பல சேனாக்கள் சிறீகோத்தவை சுற்றிவளைத்தபோது ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாளர்கள் பலரும் அங்கு வந்து ஞானசார தேரரிடம் மன்னிப்புக் கோரினர். ஆனால், தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாளர்கள் அப்படிச் செய்தது பெருந் தவறு என்று ஐக்கிய தேசியக் கட்சி பின்னர் அறிக்கை ஒன்று வெளியிட்டது. அவ்வாறு மன்னிப்புக் கேட்பதற்கு அவர்களுக்கு யாரும் அதிகாரம் வழங்கவில்லை என்று அந்த அறிக்கைகாட்டமாகக்கண்டித்தது.

அப்போது ரணில் அப்படித்தான் இருந்தார். ஆனால் சரியாக 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஒக்டோபர் 2023 அன்று ஜெர்மன் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அதற்கு நேர் எதிர்மாறாகப் பேசுகிறார்.

''சனல்- 4 ஏன் இவ்வளவு புனிதமாகக் கருதுகிறீர்கள்? நான் அதைச் செய்வதில்லை. சனல் - 4 செய்தியை நற்செய்தி உண்மை போன்று ஏன் பேசுகிறீர்கள்...'' என்று கேட்டார் அவர்.

சனல் 4 நிகழ்ச்சிகளில் பிரபாகரனின் மகன் கொல்லப்பட்டது உள்ளிட்ட போர்க் குற்றங்களைக் காட்டிய சனல் 4 இயக்குநர் கெலும் மக்ரேவை ஹீரோவாக வரவேற்று சிறீ-கோத்தவிற்கு அழைத்து வந்த ரணிலுக்கு பின் நாட்களில் சனல் 4 எப்படி துரோகி ஆனது என்பது பெரிய கேள்வி.

மேலும், அந்தப் பேட்டியில் அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளை ரணில் கடுமையாகத் தாக்கினார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையைப் பெற சஜித் பிரேமதாஸ கடுமையான முயற்சிகளைப் பெற முயன்று கொண்டிருந்தபோது கட்சியின் பழந்த தலைகள், ''ரணிலிடம் உள்ள பலம் என்ன சஜித்திடம் இல்லாதது என்ன?'' என்று பேசிக்கொள்வார்கள்.

ஒருதடவைகட்சிக்காரர்களிடம் இந்தக் கேள்வியைத் தானே கேட்டு அதற்கு ரணில் தானே சொன்ன பதில், "சஜித்துக்கு அமெரிக்கத் தொடர்புகளோ அல்லது மேற்குலகத் தொடர்புகளோ கிடையாது. ஆனால் ரணிலுக்கு அவை இருக்கின்றன...'' என்பதுதான்.

கிட்டத்தட்ட 30 வருடங்களாக ஐக்கியதேசியக்கட்சிதேர்தலுக்குப் பின் தேர்தலாகத் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்துக் கொண்டிருந்தபோதும் ரணிலைத் தொடர்ந்து கட்சித் தலைவராக வைத்துக் கொண்டிருந்தார்கள். ரணிலைப் போன்ற சர்வதேச மூளை வேறு ஒன்று இல்லை என்ற நம்பிக்கைதான் காரணம். தேர்தல்களில் ரணில் தோற்றுக் கொண்டிருந்தபோது, கட்சித் தொண்டர்களோ அமெரிக்காவும் மேற்குலகும்இந்தியாவும் சேர்ந்து எதையாவது செய்து ரணிலை திடீரென ஒருநாள் அதிகாரத்திற்குக் கொண்டு வந்துவிடுவார்கள் என்று நம்பினார்கள்.



அந்தக் கருத்தை ரணிலே விரும்பியதில்லை என்றாலும் அவர் அதனை விரும்பவேண்டியவராக இருந்தார்.

இந்த மூடநம்பிக்கையால் கடைசியாக ரணில் தேர்தலில் தோற்றார். ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டது. ரணில் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு வந்தார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி கடுமையாகிய போது, அந்த நெருக்கடியைச் சமாளிக்க சர்வதேச உறவுகளை கொண்ட ஒரே தலைவர் ரணில் தான் என்றும், அதனால் ரணிலுக்குப் பிரதமர் பதவியை வழங்குவதைத் தவிர ராஜபக்ஷக்களுக்கு வேறு வழியில்லை என்றும் ஐ.தே.க. சார்பு ஊடகங்கள் பெருமெடுப்பில் பரப்புரை செய்தன.

ரணிலைப் பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் ஆக்கியபோது பொது ஜன பெர முனவும் இதே கதையைத்தான் கூறியது.

''ஐரோப்பாவுடன் நேரடியாகப் பேசி இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கக் கூடிய, உதவிகளைப் பெறக் கூடிய ஒரே தலைவர் ரணில் மட்டுமே. அமெரிக்கா மற்றும்ஐரோப்பாவுடன்ராஜபக்சே நல்லுறவைக் கொண்டிருக்கவில்லை. அதனால்தான் ரணிலை ஜனாதிபதியாக்கினோம்...''என்றார் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க.

ரணில் பிரதமரானவுடனே அவரைச் சந்திக்க வந்த அமெரிக்கத் தூதுவர், இந்திய உயர் ஸ்தானிகர் மற்றும் மேற்குலக நாடுகளின் தூதுவர்களின் படங்கள் ஊடகங்களில் பரவலாக வெளியிடப்பட்டன. மேற்கத்திய ஊடகங்களுக்கு நேர்காணல்களை வழங்கிய அவர், மேற்கத்திய நாடுகள் தம்மை ஏற்றுக்கொள்வதாக இலங்கைக்குக் காட்டினார். அதன் பின்னர் மேற்கத்திய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து அந்தப் படங்களை இலங்கை ஊடகங்களில் வெளியிடுவதற்காக அந்த நாடுகளுக்குச் செல்லத் தொடங்கினார்.

முதலில் ராணி எலிசபெத் ராணியின் இறுதி ஊர்வலத்திற்குச் சென்றார். அங்கு பிரித்தானியப் பிரதமர் மற்றும் ஜேர்மனி அதிபரைச் சந்தித்த அவர், உலகத் தலைவர்கள் அனைவரும் தன்னுடன் இருப்பதைக் காட்டி அந்தப் படங்களை இலங்கை ஊடகங்களில் வெளியிட்டார். அதன்பின்னர், இலங்கை ஜனாதிபதி என்கிற ரீதியில் அனுப்பப்படும் எந்தவொரு சர்வதேச மாநாட்டுக்கான அழைப்புகளையும் தவறாமல் தெரிவு செய்து அவற்றில் பங்கெடுக்கச் சென்றார். அங்கு வரும் மற்றைய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து அந்தப் ஒளிப்படங்களை இலங்கை ஊடகங்களில் வெளியிட்டார். பிரான்ஸ் அதிபர் இலங்கைக்கு விமானத்துக்கு எரிபொருள் நிரப்ப வந்தபோது விமான நிலையத்துக்குச் சென்று அவரைச் சந்தித்துவிட்டு, பிரான்ஸ் அதிபர் ஒருவர் இலங்கை வருவது வரலாற்றில் முதல்முறை என்று பெருமை காட்டினார்.

"ரணில் ஒரு சிறந்த மனிதர். உலகத் தலைவர்கள் அனைவரும் இந்த மனிதனின் சட்டைப் பையில் இருக்கிறார்கள்..." என்று மக்களும் சொல்லத் தொடங்கினர். ரணிலின் ஒரு வருட கால வெளிநாட்டுப் பயணங்களைப் பற்றி அறிந்துகொண்ட பின்பே மக்கள் இதைச் சொல்லத் தொடங்கினர். தனது வெளிநாட்டுப் பயணங்களின் உச்சம் அல்லது மிகப் பெரிய சாதனை அமெரிக்க அதிபரை சந்திப்பதே என்று ரணில் நினைத்தார். ஆனால் ரணிலைச்சந்திப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி நேரம் வழங்கவேயில்லை. ரணில் இரண்டு வாரங்களில் கியூபா, அமெரிக்கா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்தார். அப்போது சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் இலங்கைக்கான நீடித்த கடன் வசதியின் இரண்டாவது தவணைக் கொடுப்பனவை வழங்குவதற்கு முன்னதான மீளாய்வுக்காக இலங்கைக்கு வந்திருந்தனர்.

அமெரிக்காவில் இருந்து திரும்பி வந்த ரணில், அமெரிக்க அதிபரை சந்திக்க முடியாத கவலையுடனேயே ஜெர்மனிக்குச் சென்றார். அவர் ஜேர்மனியில் இருந்தபோது, ரணில் ஆட்சியின் முன்னேற்ற அறிக்கை நன்றாக இல்லை என்று ஐ.எம்.எஃப் கூறியது. இரண்டாம் தவணைக் கொடுப்பனவை வழங்குவதை ஒத்திவைப்பதாக அறிவித்தது. அதனால்தான் ரணிலுக்குக் கோபம் வந்தது.

அவர் ஜெர்மன் தொலைக்காட்சி பேட்டியாளர் மீது தனது கோபத்தை வெளிப்படுத்தினார். ரணில் அமெரிக்கா சென்றபோதும், ஜேர்மனிக்கு சென்ற போதும் அமெரிக்க, ஜேர்மன் தூதுவர்கள் ரணிலிடம் உடனடியாக தேர்தலை நடத்துங்கள், அடக்குமுறைச் சட்டங்களை திரும்பப் பெறுங்கள்,

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# உலகமுடிவு மலைத்தொடருக்கு செல்கின்ற வீதிக்குத் தடை!

நுவரெலியா மாவட்டத்தில் வெலிமடையில் ரேந்தபொல - அம்பேவல வீதியின் அண்மித்த பகுதியில்புதன்கிழமைமண்சரிவு ஏற்பட்டுள்ளதால் உலக முடிவு மலைத்தொடரை நோக்கிசெல்லும் வீதி மூடப்பட்டுள்ளது.

மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் வீதி பாரியளவில் சேதமடைந்துள் ளதாகவும், போக்கு-வரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், மண் சரிவு ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதால் இந்த வீதி மூடப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (05)

## அநுராதபுரம் ரயில் நிலையத்திற்கு அருகில் மதுவை குடிக்கக்கொடுத்துக் கொள்ளை!

அநுராதபுரம் ரயில் நிலையத்திற்கு அருகில் வைத்து தன்னிடமிருந்து 3 லட்சத்து 64 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என கடற்படை வீரர் ஒருவர் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர் அநுராதபுரம் ரயில் நிலையத்துக்கு நின்றிருந்தபோது இரண்டு நபர்கள் அவருடன் உரையாடி நெருக்கமாக பழகிய பின்னர் மது பானத்தை அவருக்கு அருந்தக் கொடுத்துள்ளனர்.

அதனையடுத்து, அவர் போதையில் மயங்கிய நிலையில், குறித்த இரண்டு நபர்களும் அவரது 3 லட்சத்து 64 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கமாலை, கையடக்கத் தொலைபேசி மற்றும் 2000 ரூபா பணம் ஆகியவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளை சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## கண்டி ஆற்றில் அடித்துச்செல்லப்பட்ட மாணவன் சடலமாக மீட்கப்பட்டார்!

*கண்டி- தெல்தோட்டை - லிட்டில்வெளி பகுதியிலுள்ள ஆற்றில் அடித்துச்செல்லப்பட்ட சிறுவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

*புதன்கிழமை மாலை காணாமல்போன குறித்த மாணவனின் சடலம் வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.*

*புதன்கிழமை மதியம் புலமைப்பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்பில் கலந்துகொண்டுவிட்டு குறித்த மாணவன் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.*

*வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இடத்திலிருந்து சுமார் 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இடத்தில் வியாழன் காலை சிறுவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.*

*(05)*

## முன்னோடி பரீட்சையை பிற்போடுமாறு அறிவிப்பு!

கல்வி பொது தராதர சாதாரண தர முன்னோடி பரீட்சையை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் நடத்த ஏற்பாடு செய்யுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ் பாடசாலைகளில் நவராத்திரி விழா சார்ந்த பூஜை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெறும் வகையில் இந்த வருடம் இம் மாதம் 23 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை நடைபெற மத்திய மாகாண கல்வி திணைக்களத்திஜல் ஏற்பாடு செய்யப்பட்டது.

குறித்த ஏற்பாடானது நவராத்திரி விழா தமிழ் பாடசாலைகளில் இடம் பெறுவதற்கு ஒரு தடையாகவிருக்கும் என்ற விடயத்தை கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் கவனத்திற்குமலையக ஆசிரியர் முன்னணி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களால் எழுத்து மூலம் முன்வைக்கப்பட்டது.

இதனால் கல்வி ராஜாங்க அமைச்சர் ஒரு நீண்ட விளக்க கடிதத்த மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவிற்கு அனுப்பி வைத்துள்ளதோடு கல்வி பொது தராதர சாதாரண தர முன்னோடி பரீட்சையை பிற்போடுமாறு குறித்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை அறிந்து கொண்ட மத்திய மாகாண ஆளுநர் உடனடியாக செயற்பட்டு கல்வி பொது தராதர சாதாரண தர முன்னோடி பரீட்சையை எதிர் வரும் 25 ஆம் திகதி ஆரம்பித்து நவம்பர் 4 ஆம் திகதி முடிவுறும் வண்ணம் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார் என கல்வி இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (05)

## இலங்கையின் ஜென்டில்மேனுக்கு.......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து முறை யான விசாரணை நடத்துங்கள், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீருங்கள் என்று கடுமையாக வலியுறுத்தினர்.

ஆனால், ரணில் அவர்களிடம் இருந்து எதிர்பார்த்ததோ வேறு, தான் ஜனாதிபதியானதுமே '"நீ எங்களுடைய ஆள். தேர்தல் தேவையில்லை. நாங்கள் உன்னைப் பாதுகாப்போம். உதவிகளையும் வழங்குவோம். ராஜபக்வுக்கு நெருக்கடி கொடுக்கப் பயன்படுத்தி நிபந்தனைகளை நாங்கள் விதிக்க மாட்டோம்'' என்று அமெரிக்காவும் ஐரோப்பாவும் கூறும் என்று எதிர்பார்த்தார்.

ரணில் விரும்பியபடி அத்தகைய கதை கள் எதையும் அந்த நாடுகள் சொல்லவில்லை, அதனால் ரணில் கோபமடைந்தார். அதன் பின்னரே இலங்கையின் வெள்ளையன் என்று அழைக்கப்பட்ட ரணில் வெள்ளையர்களையே திட்டத் தொடங்கினார். ரணில் பிரபலமான தலைவர் அல்லர். அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் அவரை விரும்பின என்பதுதான் அவருக்கு இருந்த ஒரே தகுதி. ஆனால், அவர் இப்போது அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளை தாக்குகிறார், அதாவது இதுவரை அவருக்கு இருந்த ஒரே தகுதியையும் அவர் இழந்துவிட்டார்.

அதனால்தான் ரணில் இப்போது மகிந்தவின் அரசியல் அடித்தளத்தில் வந்து நிற்கிறார். சீனாவை வைத்து விளையாடத் தொடங்கியுள்ளார்.

இப்படித்தான் ரணில் ஆதரவாளர்கள் இப்போது கதையைக் கட்டமைக்கிறார்கள். சீனாவுக்கு ரணில் தேவையில்லை விளையாடுவதற்கு. அந்த விளையாட்டில் சம்பியன்கள் ராஜபக் ஷக்கள்தான் என்பது சீனாவிற்கு நன்கு தெரியும். ரையும் கோட்டும் அணிந்த ரணில் ஆங்கிலம் பேசி அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் ஆதரவைப் பெற்றால், பொது ஜன பெரமுனாவோ அல்லது பொது மக்களோ ரணிலைக் கணக்கில் எடுப்பார்கள். எனவே, ரணிலின் ஆதரவாளர்கள் இப்போது செய்வதோ ஈயைக் கொல்ல அரசனை வாளால் வெட்டிய குரங்கு செய்ததற்கு ஒப்பானதே.



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee
Chikne Fried Rice with Vegetable
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink
Cococola M
Pepsi M
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அமெரிக்க துணைச் செயலர் சுமந்திரன் எம்.பி. சந்திப்பு!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைக் கால போக்கு சம்பந்தமாக தாம் கரிசனை கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்க துணைச்செயலர், அஃப்ரீன் அக்தருக்கும் இலங்கை தமிழரசுக்கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான செயலாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு வியாழக்கிழமை தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றபோதே மேற்கண்டவாறு அமெரிக்கா கரிசனை வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவிக்கையில் –

அமெரிக்காவுக்கான விஜயத்தின்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்க துணைச் செயலர், அஃப்ரீன் அக்தருடன் சந்திப்பை நடத்தி முக்கிய உரையாடல்களை மேற்கொண்டிருந்தேன். அதன் நீட்சியாகவே தற்போதைய சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

விசேடமாக, சமகாலத்தில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடைபெறுகின்ற நில ஆக்கிரமிப்பு சம்பந்தமான விடயங்கள் பற்றி அவர் வினாக்களைத் தொடுத்திருந்தார். அச்சமயத்தில் ஆக்கிரப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை பற்றி வெளிப்படுத்தியதோடு அவை தொடர்பான விவரங்களையும் வெளிப்படுத்தியிருந்தேன். மேலும், ஆக்கிரப்புச் செயற்பாடுகள் பல்வேறு விதமான வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றமையையும் நான் எடுத்துக் கூறியிருந்தேன். இதனை விடவும், தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எவ்விதமான முன்னேற் றங்களுமற்றதொரு சூழல் காணப்படுகின்றமையையும் நான் குறிப்பிட்டிருந்தேன். அதேநேரம், ரணில் விக்கி ரமசிங்கவின் அண்மைக் காலப் போக்குகள் தொடர்பில் அவர் விசேட கரிசனையைக் கொண்டிருந்தார். குறிப்பாக, சர்வதேச விசாரணை நிராகரிப்பு, அதிகாரப்பகிர்வு விடயத்தில் காலம் கடத்தும் செயற்பாடுகள், ஜனநாயக முறைமைக்கு எதிராகத் தேர்தல்கள் நடத்தப்படாமை இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் முன்னேற்றகரமில்லாத நிலைமைகள் தொடர்பிலும் அவரிடத்தில்எடுத்துரைக்கப்பட்டது.

– என்றார். (05)

# கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் 300 அபாயகர மரங்கள் அடையாளம்!

*கொழும்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 300 அபாயகரமான மரங்கள் இனங்காணப்பட்டுள்ளன. குறித்த மரங்கள் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் அச்சுறுத்தலாக காணப்படுகின்றன.*

*எனவே, இது தொடர்பில் ஆராய்ந்து குறித்த மரங்களை அகற்ற குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோன் தெரிவித்தார். கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் 100,000 இற்கும் மேற்பட்ட பெரிய மரங்கள் உள்ளன. அவற்றில் 300 அபாயகரமானவை இனங்காணப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். கொழும்பில் உள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் இடம்பெற்ற அபாயகரமான மரங்கள் முறிந்து விழுவதைத் தடுத்தப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.*

*புறநகர் பகுதிகளில் சூழலுக்குப் பொருத்தமான மரங்கள் நடப்படுவதை உறுதி செய்யும் முறையான திட்டத்தை தயாரிக்குமாறு இராஜாங்க அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.*

*கொழும்பு மாநகர சபை எல்லையில், குறுகிய கால தீர்வாக, பொருத்தமான வேலைத்திட்டங்களைமுறையானஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் ஆரம்பிக்குமாறு இராஜாங்க அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.*

*தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதற்கும் மற்றும் புறநகர் பகுதிகளில் அபாயகரமான மரங்களை அடையாளம் காணவும், இதுபோன்ற விபத்துகளைத் தடுப்பதற்கு நீண்ட கால தீர்வைத் தயாரிக்கவும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் பயன்படுத்தும் தொழில்நுட்ப முறைகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளவும் தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் அதிகாரிக்கு அவர் உத்தரவிட்டார். (05)*

# மழையால் இடிந்து வீழ்ந்த தலதா மாளிகையின் சுவர்!

தற்போது பெய்து வரும் கடும் மழையால் கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் இடதுபுறத்தில் அமைந்துள்ள பழைய அரசு மாளிகைக்கு முன்னால் உள்ள அகழிக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பக்கவாட்டு சுவரின் மேற்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மண் சுவரின் ஒரு பகுதி வியாழக்கிழமை இரவு இடிந்து விழுந்துள்ளது.

கண்டி விஷ்ணு கோவிலுக்கு முன்பாக உள்ள தேவசம்ஹிந்தாவிற்கு அருகில் உள்ள அகழியின் பக்கவாட்டு சுவரின் ஒரு பகுதி கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் இடிந்து விழுந்தது. தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் இதன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கட்டுமான பணியின் போது, ஆறு மாதங்களுக்கு முன், ஐந்து மீற்றர் அளவுக்கு பக்கவாட்டு சுவரின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

இம்முறை வரலாற்று சிறப்பு மிக்க அரச மாளிகையின் முன்பகுதி இடிந்து விழுந்துள்ளது. இதனால், அரசமரம் ஆபத்தான நிலையில் உள்ளதால், தொல்பொருள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அறிவித்து, அந்த இடத்தை உடனடியாக மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தொல்பொருள் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று, குறித்த இடத்தை கண்காணிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)






# ஓட்டமாவடிக்குள் புகுந்த காட்டு யானை அட்டகாசம்





ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மக்கள் குடியிருப்பு பிரதேசத்திற்குள் புகுந்த யானையின் அட்டகாசத்தால் சொத்துக்களுக்கு சேதமேற்பட்டுள்ளதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வியாழக்கிழமை நள்ளிரவு ஓட்டமாவடி ஆற்றின் ஊடாக பிரதேசத்திற்குள் புகுந்த யானை ஓட்டமாவடி 02 ஜீ.எஸ்.ஓ.வீதியில் உள்ள இரண்டு வீட்டின் மதில்கள் மற்றும் பயன்தரக்கூடிய மரங்களையும் சேதப்படுத்தி சென்றுள்ளது.

இரவு யானையின் அட்டகாசத்தின் போது வீட்டில் இருந்த சிறுவர்களும் பெண்களும் மிகவும் அச்சத்தில் இருந்தனர் எனவும் எங்களுக்கு இப் பகுதிக்கு வருடா வருடம் யானைகளின் தொல்லை இருப்பதாகவும் இதற்கு உரிய அதிகாரிகள் தீர்வைப் பெற்றுத்தருமாறும் கோறிக்கை விடுக்கின்றனர்.

ஊரின் ஓட்டமாவடி பிரதேசத்தின் சன நெரிசல்மிக்க பிரதான பகுதிக்குள் காட்டு யானை புகுந்து அட்டகாசம் புரிந்துள்ளமையால் ஓட்டமாவடிப் பிரதேச மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். (05)

## பயாகலையில் பொலிஸ் கான்ஸ்டபிள்மீது ஓட்டோவில் வந்தவர்களால் தாக்குதல்!

களுத்துறை வடக்கு பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு இரவு உணவுப் பார்சலைக் கொள்வனவு செய்யச் சென்ற பயாகலை பொலிஸ் கான்ஸ்டபிள் மீது ஓட்டோவில் வந்த சிலர் தாக்குதல் நடத்தியதாக கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளானவர் பயாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறுமுறைப்பாடுகள்பிரிவில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் கான்ஸ்டபிள் முன்னர் களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றியவர் எனவும், அதன்போது ஏற்பட்ட போட்டிகாரணமாகஇந்ததாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (05)

## கோனாவிலில் விபத்து ; இளைஞர் பரிதாப சாவு

கிளிநொச்சி கோனாவில் பகுதியில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோணாவில் நோக்கி பயணித்த இருசக்கர உழவு இயந்திரமும ;எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது. இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (05)

## இருவரைக் கொலை செய்த சம்பவம்: ரமேஷின் சகா அதிரடிப்படையால் கைது!

இருவரைக் கொலை செய்து, இருவரைக் காயப்படுத்திய சம்பவத்தில்மோட்டார்சைக்கிளைச் செலுத்திச்சென்றதாகக் கூறப்படும் மன்னா ரமேஷின் சகா ஒருவர் தல்துவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் என விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

அவிசாவளை கலபலன கந்த பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து 6,100 மில்லிகிராம் ஹெரோயின், கையடக்கத்தொலைபேசி மற்றும் 4,340 ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 20 ஆம் திகதி அவிசாவளை, தல்துவ பிரதேசத்தில் ரி-56 துப்பாக்கியால் சுட்டு இருவரைக் கொன்று இருவரைப் காயப்படுத்திய சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளைச் சந்தேக நபரரே செலுத்திச்சென்றார் எனத் தெரியவந்துள்ளது. (05)

## போதைப் பொருளுடன் இராணுவ வீரர் கைது

### கண்டியில் சம்பவம்

கண்டி வில்லியம் கோபல்லாவ மாவத்தையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஹெரோயினுடன் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கண்ணொருவ இராணுவ முகாமில் கடமையாற்றும் 39 வயதுடைய நபராவார்.

சந்தேக நபர் தொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 470 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (05)

## திருமண நிகழ்வில் கத்திக்குத்து 59 வயதுடைய நபர் கொலை!

மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விலிம்புல பிரதேசத்தில் திருமண நிகழ்வொன்றின்போது 59 வயதுடைய நபர் ஒருவர் கத்தியால் குத்தி கொல்லப்பட்டுள்ளார் என மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விலிம்புலவில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மாகம்மனகே சிறிமேவன் என்பவரே கத்திக்குத்துத் தாக்குதலில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில்உயிரிழந்துள்ளார்எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விலிம்புலவில் உள்ள வீடு ஒன்றில் வியாழக்கிழமை இடம்பெற்ற திருமண நிகழ்வின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவருக்கும்நிகழ்வில் கலந்து கொண்ட ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் காரணமாகவே கத்திக்குத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

## தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் பொன்.செல்வராசா நேற்று காலமானார்!

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத்தமிழரசுக் கட்சி சிரேஷ்ட தலைவருமான பொன்.செல்வராசா நேற்று (வெள்ளிக்கிழமை) காலமானார்.

## தமிழீழ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரான சிறிதுங்க ஜயசூரியவினால் கொழும்பில் கூட்டப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு என்று கூறப்பட்டு மாகாண சபைகள் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதற்கு ஆதரவளிக்கும் நவ சமசமாஜக் கட்சியின் தீர்மானத்தை எதிர்த்து கட்சியிலிருந்து பிரிந்து சென்று ஐக்கிய சோசலிசக் கட்சியை உருவாக்கியவர்சிறிதுங்கஜயசூரிய. அவராலேயே இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கொழும்பு சிவில் சமூகத்தில் குறிப்பிடத்தக்கவராக ஊடகங்களால் அடையாளப்படுத்தப்படும்ஸ்வஸ்திகா அருலிங்கம், சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ள சபையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றியதனதுகருத்தைஆங்கிலத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகள் ஒரு பாசிச அமைப்புஎனநான்நினைக்கின்றேன். இது எனது மிகவும் தனிப்பட்ட கருத்து. ஏனெனில் தமிழ் பேசும் பலர்எனதுகருத்தைஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என நினைக்கின்றேன்.

தமிழ் சமூகத்தினுள் உருவாகியுள்ளபுற்றுநோய்விடுதலைப்புலிகள் எனவும் கருதுகின்றேன். போரின் முடிகின்றபோது அரசியல் ரீதியாக அதைஎவ்வாறுகையாள்வதுஎன்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

முள்ளிவாய்க்கால் படுகொலையில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் இறந்தமை இவர்களின் பிடிவாத அரசியலின் விளைவே.

பலஎதிரிகளைக்கொன்று,தமக்கு உடன்படாத பல தமிழர்களையும் கொன்று, சிறுவர்களை போருக்கு சேர்த்து, தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு வாய்ப்பளிக்காத கொடூர பாசிச அமைப்பு விடுதலைப் புலிகள் இயக்கம்.

போரின் இறுதிக்கட்டத்தில் உயிரிழந்தவர்களில் பலர் நீடிக்க முடியாத போருக்காக விடுதலைப் புலிகளால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள்.

இதுவே, விடுதலைப் புலிகள் அமைப்பு குறித்த எனது தனிப்பிட்ட கருத்தாகும்என்றுதனதுஉரையில் விடுதலைப் புலிகள் பற்றிக் குறிப்பிட்டபோது அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net · Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net · Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir

# புலிகளின் தங்கத்தை வேட்டையாட வவுனியாவில் பல இடங்களில் அகழ்வு



வவுனியா, புதியகோவில் குளத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் தங்கம் என சந்தேகிக்கப்படும் பல இடங்களில் வியாழக்கிழமை வவுனியா நீதிவான் வசீம் அஹமட் மேற்பார்வையில் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தனியார் காணியில் ஆயுதங்கள் மற்றும் தங்கம் புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மூன்று இடங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இறுதி யுத்தத்தின் போது குறித்த காணி அமைந்துள்ள இடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முகாம் இருந்ததாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் வவுனியா நீதிவான் நீதிமன்ற உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு பொலிஸ் குற்றத்தடுப்புவிசாரணை ஆய்வக அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பூவரசங்குளம் பொலிஸார் இணைந்து அகழ்வு பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இரண்டு பேக்ஹோ இயந்திரங்களின் உதவியுடன் நிலத்தில் பல மணிநேரம் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட போதும் ஆயுதங்களோ அல்லது வேறு எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

தோண்டப்பட்ட இடங்களில் எதுவும் கிடைக்காததால், மீண்டும் தோண்டப்பட்ட இடங்களை மூட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் வாசிம் அகமது உத்தரவிட்டார். (05)

# மருமகனுடன் சைக்கிள் பின்னால் இருந்து சென்ற மாமனார் கீழே விழுந்து உயிரிழப்பு!

வைத்தியசாலைக்கு, மருமகனுடன் சைக்கிளின் பின்னால் இருந்து சென்ற மாமனார் கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் வெளிச்சவீடு வீதி, பருத்தித்துறையை சேர்ந்த பிலிப்பு இராஜசிங்கம் (வயது 52) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த நபர் கடந்த 7 ஆம் திகதி காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுவதற்காக மந்திகை வைத்தியசாலைக்கு, தனது மருமகனின் சைக்கிளின் பின்னால் இருந்து சென்றுள்ளார். இந்நிலையில் இடைவழியில் அவர் கீழே விழுந்துள்ளார்.

இந்நிலையில் அவர் ஓட்டோ மூலம் மந்திகை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று, அங்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் செவ்வாய்க்கிழமை 10 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் புதன்கிழமை ஒப்படைக்கப்பட்டது. (05)

# திருமலை பாலம்போட்டாறு கிராமத்துக்குள் காட்டு யானை ஒன்று புகுந்து அட்டகாசம்

திருகோணமலை பாலம்போட்டாறு கிராமத்தின் பத்தினிபுரம் பகுதியில் தொடர்ச்சியாகக் காட்டு யானைகளால் பலத்த சேதங்கள் ஏற்படுவதாக அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வியாழக்கிழமை புகுந்த காட்டு யானைகளால் பலன்தரும் மரங்களான தென்னை, வாழை, கத்தரி, வெண்டி உள்ளிட்ட மரங்களைத் துவம்சம் செய்து விட்டு சென்றுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியை அண்மித்த இடத்தில் பாதுகாப்பான யானை வேலி இன்மை காரணமாக ஊருக்குள் யானை படை எடுப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

மாலை நேரங்களில் தங்களது பிள்ளைகளை மேலதிக வகுப்புக்கு அழைத்து சென்று பயத்துடனே வீடுகளுக்கு செல்ல நேரிடுகிறது.

நிம்மதியாக தூங்க முடியாது மாலை வேலையிலேயே யானை ஊருக்குள் வந்து விடுகிறது.

இதனால் அச்ச சூழ்நிலையில் தாங்கள் காலத்தை கழிக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

தோட்டச் செய்கையை வாழ்வாதாரமாக நம்பியே இருக்கும் போது அதனையும் யானை அழித்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

பல தடவை உரிய அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுத்தும் எவ்வித தீர்வும் கிட்டவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இனிமேலாவது யானையின் தாக்குதலில் இருந்து தங்களைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# யாழில் காய்ச்சலினால் இளம் குடும்ப பெண் பலி!

யாழில் 06 நாள்களாக தொடர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இளம் குடும்ப பெண் உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவரூபன் தேனுசா (வயது 24) என்பவரே உயிரிழந்துள்ளார்.

06 நாள்களாக கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த 10 ஆம் திகதி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (05)

# சுற்றாடல் அமைச்சு ஜனாதிபதியின் கீழ்! வெளியானது வர்த்தமானி

முன்னாள் அமைச்சர் நசீர் அஹமட் வகித்த சுற்றாடல் அமைச்சுப் பதவியை ஜனாதிபதியின் கீழ் கொண்டுவருவதற்கான அதிவிசேட வர்த்தமானி வெளியீடப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சு ஜனாதிபதியின் பொறுப்பில் காணப்படவேண்டும் என தீர்மானித்து ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய ஜனாதிபதி செயலாளரால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# இஸ்ரேல் – பாலஸ்தீன் மோதலில் ஐ.நா. இரட்டை நிலைப்பாடு வகிக்கவேண்டாம்

## எனத் தெரிவித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

இஸ்ரேல் - பாலஸ்தீன் மோதலில் ஐக்கிய நாடுகள் இரட்டை நிலைப்பாட்டை வகிக்க வேண்டாம் எனவும் மனித உரிமை எங்கே எனத் தெரிவித்தும் புதிய மக்கள் முன்னணி நேற்று (வெள்ளிக்கிழமை) கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் காரியாலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு கோஷங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தின் பின்னர் மகஜரொன்றையும் கையளித்தனர். (05)

# சுனில் ரத்நாயக்கவுக்கு வழங்கிய மன்னிப்புக்கு எதிரான மனுக்களை விசாரிக்க மன்று அனுமதி!



2000 ஆம் ஆண்டு டிசெம்பரில் இடம்பெற்ற மிருசுவில் படுகொலைச் சம்பவத்தில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பை எதிர்த்து மாற்றுக் கொள்கைக்கான நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் தாக்கல் செய்த மனுவைத் தொடர உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை அனுமதி வழங்கியுள்ளது.

மாற்றுக் கொள்கைக்கான நிலையம், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் கொலையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட பலர் தாக்கல் செய்த பல மனுக்களை பரிசீலித்த பின்னரே, பிரிவு 12(1)இன் கீழ் இந்த மனுவை விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

பொது மன்னிப்பு தொடர்பான பல ஆவணங்களை உச்சநீதிமன்றத்துக்கு வழங்குவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது.

மனுக்கள் மீதான தங்கள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யவும், அந்த ஆட்சேபனைகளுக்கு மனுதாரர்கள் பதிலளிக்கவும் உச்ச நீதிமன்றம் அவகாசம் வழங்கி, இந்த வழக்கை அடுத்த வருடம் மே மாதம் 17ஆம் திகதி விசாரணைக்கு ஒத்திவைத்தது. (05)

# சம்மாந்துறையில் மீட்ட ஆயுதங்கள் குறித்து விசாரணை முன்னெடுப்பு!



கிணறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்மன் கோவில் காணி ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த கிணறு ஒன்றை வியாழக்கிழமை துப்புரவு செய்த போது இவ்வாறு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன் போது, எல்.எம்.ஜி. துப்பாக்கி தோட்டாக்கள் 57, ரி56 ரக துப்பாக்கி ரவை கூடு இரண்டு, 261 தோட்டாக்கள், 0.22 துப்பாக்கிக்குரிய வெற்று தோட்டாக்கள் 46 அதற்குரிய தோட்டாக்கள் 3, எம் 16 துப்பாக்கிகுரிய தோட்டாக்கள் 11, சுடர் துப்பாக்கி ஒன்று என்பன கிணற்றினுள் இருந்து மீட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த பொருள்கள், ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# காணாமல்போன மகனைதேடிய தந்தை வவுனியாவில் உயிரிழப்பு



வவுனியாவில் யுத்த காலத்தில் காணாமல்போன தனது மகனைத் தேடிய தந்தை ஒருவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

வவுனியா, மகாறம்பைக்குளம் ஸ்ரீராமபுரம் பகுதியை சேர்ந்த முத்தையா ஆறுமுகம் (வயது 65) என்ற தந்தையே வியாழக்கிழமை மரணமடைந்துள்ளார்.

இவரது மகனான ஆறுமுகம் சிவகுமார் கடந்த 2007 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து கடத்தப்பட்டிருந்தார்.

அவரைத் தேடி வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களில் குறித்த தந்தை கலந்து கொண்டு தனது மகனைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி போராட்டங்களில் கலந்துகொண்டிருந்த நிலையில் மகனைக் காணாமலேயே அவர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.10.2023இல் வெளியிடப்பெற்றது.